# மெட்ரோ நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

**சென்னை, பிப். 27–**
மெட்ரோ ரயில் நிலையங்களில், இன்றும், நாளையும், இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகின்றன.

சென்னை விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கும்; பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. மெட்ரோ ரயிலில், பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இதையொட்டி, ஆலந்துார் மற்றும் அசோக் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில், இன்றும், நாளையும், காலை, 10:00 மணி முதல், மாலை, 5:00 மணி வரை, இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. மெட்ரோ ரயில் நிர்வாகம், ஆலந்துார் அரிமா சங்கம் மற்றும் எஸ்.ஆர்.எம்., மருத்துவ குழுமம் இணைந்து, இம்முகாமை நடத்துகின்றன.